## Special Orientation for I UG Girls

திருப்பத்தூர் தூய நெஞ்சக்கல்லூரி (தன்னாட்சி) மகளிர் மையத்தின் சார்பாக உன்னில் உள்ள ஆற்றல்..! **(The Power in You)** என்ற தலைப்பில் 10.18.20221 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் சிறப்புச் சொற்பொழிவு கரேஞோ அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வேலூர் ஆக்ஸிலியம் கல்லூரியின் ஆங்கிலத்துறைப் பேராசிரியர் மற்றும் நட்டுநலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் பி.ஆர். அமுதா ஆரோக்கிய மேரி அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற வாழ்த்திய நமது கல்லூரியின் இல்லத்தந்தை மற்றும் செயலர் அருட்தந்தை முனைவர் ஜான் அலெக்ஸாண்டர் அடிகளார், துணை முதல்வர் அருட்தந்தை முனைவர் தியோ.ஃ.பில் ஆனந்த் அடிகளார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

முதலாமாண்டு ஆங்கிலத்துறை மாணவி செல்வி ரோஜிலின் வரவேற்புரை ஆற்றினார். முதலாமாண்டு வேதியியல் துறை மாணவி செல்வி பியூலா நன்றியுரை ஆற்றினார். முதலாமாண்டு மாணவிகள் செல்வி தீப்திகா மற்றும் செல்வி தீபிகா ஆகியோர் இந்நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்கள். ஆங்கிலத்துறைப் பேராசிரியர் முனைவர் ஜாய் கிரிஸ்டினா சிறப்புச் சொற்பொழிவாளரை அறிமுகப்படுத்தினார்.

பெண்கள் தம்மில் உள்ள சக்தியை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். சக்தி வாய்ந்தவர் யார்? பாலின மோதல், பிரச்சனைகள் மற்றும் அதனை எதிர்கொள்ளும் முறைகள், தங்கள் சக்தியை வளர்த்துக் கொள்ளும் சாத்தியங்கள் முதலிய கருத்துகளைப் பற்றி எடுத்துக்காட்டுடன் விளக்கினார்.

தற்போது பெண்கள் தங்களைப் பற்றிய தவறான கருத்துகளைத் தகர்த்தெரிகிறார்கள் ஆக்கப்பூர்வமான சித்தாந்தத்தை உருவாக்குகிறார்கள். ஊடகங்கள் வாயிலாக தற்போது பெண்களுக்குத் தனித் திறமைகளை வெளிப்படுத்துகிறார்கள். பெண்ணுக்கு நிகர் பெண்ணே என எண்ணவும் செய்கிறார்கள் என்று நேர்மறையான கருத்துக்களை மாணவிகளிடேயே பகிர்ந்து கொண்டார்.

“பெயர் தெரியாத பெண், கூகுள் உதவியாளராகப் பணிவுடன் குரல் கொடுக்கிறார். பிக்பாஸ் நிகழ்ச்சியில் அதிகாரத்துடன் ஆண் குரலில் உரையாற்றுவது ஏன்?” என்று மாணவிகளிடம் கலந்துரையாடினார். “உலகை மாற்றுவதற்கு நாம் பயன்படுத்தக் கூடிய மிக சக்திவாய்ந்த ஆயுதம் கல்வியே” என்பது போன்ற கருத்துக்கள் மூலம் மாணவிகளுக்கு நற்சிந்தனைகளை எடுத்துக்கூறினார்.

பிரிவு – 1 மாணவிகளின் டீன் (Dean) முனைவர் அ.மெர்சிலின் அனிதா மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியர் மு.ரோஸ் ஆகியோர் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைப்புச் செய்தார்கள்.

இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற உதவி நமது தூய நெஞ்சக்கல்லூரி நிர்வாகத்திற்கும், இல்லத்தந்தை உள்ளிட்ட அனைத்து அருட்தந்தையர்களுக்கும் மகளிர் மையத்தின் சார்பாக நன்றி.









Sacred Heart College
WOMEN CELL
SHIFT - I
Special Orientation for I UG Girls
Dr. P.R. Amutha Arockia Mary.
Date : 10.08.2022
COLLEGE